Sethubavachatram—Sambai Road.

*254 Q.—THIRU N. SUNDARESA THEVAR : Will the Hon. Minister for Public Works be pleased to state—

(a) whether the road running from Pattukottai via Pallathur Sethubavachatram to Sambai has been taken over by the ...vernment as a Highways Department road; and

(b) if so, the steps taken to improve this road ?

சேதுபாவா சத்திரம்—சாம்பை சாலை.

...திரு. என். சுந்தரேச தேவர் : மாண்புமிகு பொதுப்பணி அமைச்சர் ...ர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பட்டுக்கோட்டையிலிருந்து பள்ளத்தூர், சேதுபாவாசத்திரம் ...யாக சாம்பை செல்லும் சாலை அரசினரால் நெடுஞ்சாலைத் துறை ...யாக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளதா ?

(இ) அப்படியானால் இந்தச் சாலையை அபிவிருத்தி செய்ய என்ன ...வகை செய்யப்பட்டுள்ளது ?

...மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : (அ) ஆம்.

(இ) சேதுபாவாசத்திரத்திலிருந்து சாம்பை செல்லும் சாலைப் ... 1967–68-ல் அரசினரால் மேற்கொள்ளப்பட்டு நன்முக பராமரிக்கப் ... வருகிறது. பட்டுக்கோட்டையிலிருந்து சேதுபாவாசத்திரம் ...லும் சாலை 1968–69-ம் ஆண்டு பேருந்து வழித்தடங்களை மேற் ...ள்ளும் திட்டத்தின் கீழ் அரசினரால் மேற்கொள்ளப்பட்டு "பேருந்து ...த்தடங்களை மேம்பாடு செய்யும் மானியத்தின்" கீழ் பராமரிக்கப்பட்டு ...கிறது.

...திரு. என். சுந்தரேச தேவர் : காட்டாறு அந்தப் பகுதியில் ஓடுவதால் ...க் காலங்களில் அந்த ரோடுகளில் பேருந்துகள் செல்வதற்கு தடங்கல் ...டுகிறது. அதைச் சரி செய்ய என்ன நடவடிக்கை எடுக்கப்படும் ?

...மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : காட்டாறு செல்வதாக ...ந்தால் அதற்காகத் தகுந்த பாலம் ஏற்பாடு செய்யலாம்.

Bhudhan and Gramdhan.

255 Q.—THIRU R. KRISHNASWAMY NAIDU (on behalf ...THIRU N. R. THIAGARAJAN) : Will the Hon. the Minister ...Local Administration be pleased to state—

(a) whether there is any proposal to extend the "Bhudhan ...Gramdhan" movements to Tirunelveli district ; and

(b) if so, the details thereof ?

பூதான், கிராம்தானதிட்டங்கள்.

...திரு ஆர். கிருஷ்ணசுவாமி நாயுடு (திரு. என். ஆர். தியாகராஜன் ...லில்) : மாண்புமிகு உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க் ... வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) திருநெல்வேலி மாவட்டத்திற்கு 'பூதான் கிராம்தான்' திட்டங்களை ...புடுத்தும் உத்தேசமுண்டா ?

(இ) ஆமெனில், அவற்றின் விவரங்கள் யாவை ?

...மாண்புமிகு திரு. எம். முத்துசாமி : (அ), (இ) : மேலவை முன் அறிக்கை a ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

---

a Printed as Appendix V on pages 140

27th March 1969]

திரு. கே. என். சாமிநாதன் : தஞ்சை மாவட்டத்தில் பூதானம், கிராம தானம் ஆகியவற்றில் ஏதேனும் பலன் ஏற்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : இங்கே வைத்துள்ள விவர அறிக்கையில் சொல்லப்படுகிற நிலங்கள் வந்ததாகவும் கொடுக்கப்பட்டதாக வும் இருக்கிறது. அந்த வகையில் பயன் அடைந்ததாகக் கருதவேண்டி யிருக்கிறது.

திரு. கே. என். சாமிநாதன் : கொடுக்கப்பட்ட நிலத்தில் விளைந்திருக் கிறதா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : விவரம் இல்லை. சில இடங் களில் நிலம் கொடுக்கப்பட்டுப் பயனடைந்து வருகிறார்கள். பெரும்பாலான நிலங்கள் பயன்படாமல் இருக்கின்றன. கொடுக்கப்படுகிற நிலங்களைப் பொருத்தவரையில் பயன்படாமல் இருக்கிற நிலங்களைத்தான் விரும்பிக் கொடுப்பதாகச் சொல்கிறார்கள்.

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: என்ன அடிப்படையில் இந்தப் பூதான நிலங்கள் கொடுக்கப்படுகின்றன ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : அதற்கென்று விதிமுறைகள் இருக்கின்றன. நிலமில்லாத ஏழைகளுக்குப் பகிர்ந்தளிக்கப்படுகிறது. அதை நிர்ணயிக்கவேண்டிய பொறுப்பு நிலக்கொடை வாரியத்துக்கே விடப்பட்டிருக்கிறது. அவர்கள் பார்த்து "இன்னாருக்கு வழங்கலாம்" என்று முடிவெடுத்தால் அவர்களுக்கு வழங்கப்படுகிறது.

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : இரண்டு மூன்று ஏக்கர் உள்ளவர்கள் அதில் விளைச்சல் அதிகமாக்குவதற்கு மற்ற வசதிகள் இல்லாத நிலையில் இருக்கிறார்கள். அதனால் பெரும்பாலான நிலங்கள் பயன்படுத்தப்படாமல் இருக்கின்றன. அரசாங்கம் அந்த நிலங்களைப் பயன்படுத்தத் தக்க வகை யில் வேறு சில வசதிகளை அவர்களுக்குச் செய்து கொடுக்க திட்டம் வகுக்குமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : கிராமக் கொடை நிலங்களைப் பயிரிடுவதற்கு அரசாங்கம் அவர்களுக்கு நிதி உதவி அளிக்கிறது.

திரு. சி. வி. ராஜகோபால் : தலைவர் அவர்களே, இந்தப் பூதானம் என்று சொல்லப்படுகிற இயக்கமானது வினோபாவினால் நடத்தப்பட்டு இருக் கிறவர்களிடம் நிலத்தை வாங்கி இல்லாதவர்களுக்குக் கொடுப்பது வழக் கம். அதைப் போலவே நம்முடைய சர்க்காரும் நிறைய நிலம் இருக்கிற வர்களிடம் வாங்கி இல்லாதவர்களுக்குக் கொடுப்பதற்கு ஏதாவது முறை யைக் கையாளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : பூதானம், கிராமதானம் என்ற இயக்கம் நாட்டு மக்கள் நல்ல எண்ணம் கொண்டு கொடுப்பார்கள் என்ற கருத்தில் இருப்பது. தீவிரமாக எடுக்க வேண்டிய காலம் வந்தால் அதை பற்றிக் கவனிக்கலாம்.

திரு. என். சுந்தரேசதேவர் : அந்த நிலங்களை ஏற்றுக்கொண் பிறகு அதை விற்றுவிடுகிறார்கள் என்று கூறப்படுகிறது. அப்படி அவர்க விற்கக் கூடாது என்று அரசு உத்தரவிடுமா ?

மாண்புமிகு திரு. எம். முத்துசாமி : அப்படிப்பட்ட புகார்கள் இரு தால் தனியாகக் கவனத்திற்குக் கொண்டுவரும்போது கவனிக்கலாம்.

திரு. கே. என். சாமிநாதன் : பூதானத்திற்குக் கொடுக்கப்பட்ட நில களில் பெரும்பாலானவை விளைச்சலுக்கு லாயக்கானதாக இல்லை என் கருத்து பரவலாக சொல்லப்படுகிறது. விளையக் கூடிய நிலம் எவ்வள இருக்குமென்ற தகவலை அமைச்சர் அவர்கள் கொடுக்க முடியுமா ?

[27th March 1969

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : தாணம் கொடுக்கிற மாட்டை பல்லைப் பிடித்துப் பதம் பார்க்கக் கூடாது என்று சொல்வார்கள். பயனளிக்கும் நிலங்கள் எவ்வளவு என்ற விவரம் இல்லை. தனிக் கேள்வி கேட்டால் விவரம் கொடுக்கலாம்.

Madras Corporation Elections.

* 256 Q.—THIRU R. KRISHNASWAMY NAIDU (on behalf of THIRU N. R. THIAGARAJAN) : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) the number of riots, stabbing incidents that took place near the counting centres after the Madras City Corporation Elections;

(*b*) (1) the number of persons arrested ; and

(2) the number of persons prosecuted; and

(*c*) the number of persons sentenced ?

மாநகராட்சி தேர்தல்.

திரு. ஆர். கிருஷ்ணஸ்வாமி நாயுடு : திரு. என். ஆர். தியாகராஜன் : சார்பில்): மாண்புமிகு உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்.—

(அ) சென்னை மாநகராட்சி தேர்தல் முடிந்து வாக்கு எண்ணுமிடத் தில் எத்தனை கலகங்கள், கத்திக் குத்துக்கள் நடந்தன ?

(இ) (1) எத்தனை பேர் கைதாயினர் ? (2) எத்தனை பேர் மீது வழக்கு தொடரப்பட்டன ?

(உ) எத்தனை பேர் தண்டனையடைந்தார்கள் ?

மாண்புமிகு திரு. எம். முத்துசாமி : (அ) 1968 அக்டோபரில் நடை பெற்ற சென்னை மாநகராட்சித் தேர்தலின்போது வாக்கு எண்ணுமிடங் களுக்கு அருகில் கத்திக்குத்து நிகழ்ச்சி எதுவும் நடக்கவில்லை. ஆனால் தியாகராயர் கல்லூரியில் வாக்கு எண்ணும் இடத்தின் முன் பொது மக்க ளின் பாதுகாப்பிற்கு ஊறுவிளைவித்து சோடா பாட்டில்களையும், கற்களையும் வீசியெறிந்து கலவரம் ஏற்படுத்தும் நிகழ்ச்சி ஒன்று நடந்தது.

(இ) and (உ) தியாகராயர் கல்லூரி அருகில் ஏற்பட்ட கலவரத்தின் போது மூவர் கைது செய்யப்பட்டனர். இது சம்பந்தமாக வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டது. அதில் மூவரும் தண்டிக்கப்பட்டு குற்றவாளிகள் நன்னடத்தை சட்டத்தின் கீழ் எச்சரிக்கை செய்யப்பட்டனர்.

" Gherao " at Madurai Central Bus Stand.

* 257 Q.—THIRU R. KRISHNASWAMY NAIDU (on behalf of THIRU N. R. THIAGARAJAN) : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) whether ' Gherao ' was observed in January 1968, in the Central Bus Stand at Madurai by parking the taxis in a row across the exit gate thereby blocking the buses from coming out of the bus stand; and

(*b*) if so, the reasons therefor ?